RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2248

OPEN ACCESS

# சிங்கப்பூர்க் கவிஞர் பாத்தென்றல் முருகதாசனின் 'அழகோவியம்'- ஒரு பன்முகப் பார்வை

**றோ. செல்வராணி** [அ, *]

[அ] தமிழியல் துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி-627012, தமிழ்நாடு, இந்தியா

# 'Azhagoviyam' by Singaporean Poet Pathental Murugadhasan - A Multifaceted Perspective

**R. Selvarani** [a, *]

[a] Department of Tamil studies, Manonmaniam Sundarnar University, Tirunelveli-627012, Tamil Nadu, India

* Corresponding Author: roserani72@gmail.com

Received: 31-03-2022
Revised: 13-07-2022
Accepted: 30-07-2022
Published: 26-08-2022

Check for updates

**ABSTRACT**

Poetry composed by poets should help in creating a society with lofty ideas and goals that sow the best and most nutritious seeds in the minds of the readers and guide them well. The Singai poet, Paththenral Murugadossan, who attempted to compose poetry with such a lofty mind, was one of the foremost poets of Singai. His work 'Azhakoviyam', a short poem that has been taken up as a subject of study here, incorporates an epic flavour and describes the status of the country. The author has created this short poem with patriotism as well as the dignity of domesticity with two eyes. In the sixties, there was a chaotic atmosphere in the history of Singhai. There was a great deal of popular hostility towards those countries because of the occupation of Singapore by different nationalities. Its impact was reflected in the literature of the day. One of the most notable pieces of literature is Alakoviyam. This article examines the history of Singai at that time, and the author reveals in this short epic that the Tamil people migrated in search of livelihood, considering Singai as their motherland and working hard for the development of the country. Moreover, the purpose of this article is to examine from a multifaceted perspective the genetic ideas, social ideas, ethical thoughts, and literary merits contained in this short poem.

**Keywords:** Azhagoviyam, Traditions, Ethical, Social, Migrants, Traditions and Cultures

## முன்னுரை

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடங்கி இன்றுவரை தமிழில் எண்ணிலடங்கா இலக்கியங்கள் காப்பியங்களாகவும் புதினங்களாகவும் கவிதைகளாகவும் கதைகளாகவும் கட்டுரைகளாகவும் தமிழ் மொழிக்கு மணி மகுடமாய்த் திகழ்கின்றன. படைப்புகள் யாவும் நாட்டுக்கு நாடு-இனத்துக்கு இனம் வேறுபடுவதோடு அந்தந்த நாட்டின் சூழலுக்கு ஏற்றவாறு புனையப்படுகின்றன. அவை யாவும் மக்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடியாகத் திகழ்கின்றன. அவற்றுள் சில தமிழ்த்தாயின் குன்றா இளமைக்கு மேலும் மெருகூட்டி இன்றைய இளம்தலைமுறையினருக்குப் பயன்தரும் வண்ணம் அக்கால பண்பாட்டுக் கூறுகளைப் படம்படித்துக் காட்டும் இலக்கியங்களாக ஆழப்பதிந்திருக்கும். அவ்வகையில் சிங்கையில் புனையப்பட்ட புகழ் பெற்ற சிறந்த குறுங்காவியம்தான் 'அழகோவியம்'. 1963 ஆம் ஆண்டில் கோலாலம்பூர் தமிழ் இளைஞர் மணிமன்றம் நடத்திய குறுங்காவியப் போட்டியில் முதல் பரிசான தங்கப் பதக்கத்தைப் பெற்ற

பெருமைக்குரியது இக்காவியம். இதனை அழகு தமிழ்ச் சொற்கள் அணிவகுத்து நின்று இனிய சந்தங்களுடன் எளியநடையில் கற்போருக்கு உவகையூட்டும் வண்ணம் படைத்துள்ளார் பாத்தென்றல் முருகதாசன்.

இக்குறுங்காவியத்தில் ஆசிரியர் சிங்கையின் வளர்ச்சிக்காகத் தமிழர்கள் ஆற்றிய பணியினை அழகுற எடுத்துரைத்துள்ளார். போர்க்காலங்களில் தங்கள் குடும்பங்களையும் பாராது நாட்டிற்காகத் தங்கள் உயிரையே தியாகம் செய்த தியாக உள்ளங்களின் வீரச் செயல்களை வரலாற்றுப் பெட்டகமாகப் பதிவு செய்துள்ளார். இவை இன்றைய தலைமுறையினரிடம் நாட்டுப்பற்றை வளர்க்க எவ்வாறு தூண்டுகோலாக விளங்குகின்றன என்பதனையும் எதிர்கால இளம் தலைமுறையினர் இல்லற வாழ்க்கையில் அனைத்து செல்வங்களையும்விடக் குழந்தை செல்வமே மிகச் சிறந்த செல்வம் என்பதனை உணர்ந்து இல்லற அறத்தினைக் கட்டிக்காக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தியிருக்கும் பாங்கினையும் பன்முகப் பார்வையில் இக்கட்டுரை ஆராய்கிறது.

## அழகோவியத்தின் ஆசிரியர்

அழகோவியத்தை அழகாக வடித்த பெருமைக்குரியவர் சிங்கையின் தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவரான பாத்தென்றல் முருகதாசன் ஆவார். இவரது இயற்பெயர் வே.பழனி. இவர் முருகன் மீது கொண்ட ஆறாக்காதலினால் தம் பெயரை முருகதாசன் என மாற்றினார். அழகோவியத்தின் தலைவன் தலைவியரது பெயரையே முருகன், வள்ளி என அமைத்து தானொரு முருகனடியார் என மெய்பித்துள்ளார். இவர் தனது பதிமூன்றாவது அகவையிலிருந்தே இசைப்பாடல்கள் இயற்றியும் பாடியும் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகக் கதை, கட்டுரை, கவிதை போன்றவற்றைப் படைத்துச் சிங்கையின் இலக்கிய உலகிற்கு அரும் பங்காற்றி வருகிறார். தமிழ் இளைஞர் மன்ற இயக்கம் 1977ஆம் ஆண்டில் இவருக்குப் 'பாத்தென்றல்' என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தது. 'தென்கிழக்காசியான் விருது', 'தமிழவேள் விருது', 'கரிகாலன் விருது' போன்ற பல்வேறு இலக்கிய விருதுகளை வென்ற பெருமைக்குரியவர் பாத்தென்றல்.

## குறுங்காவியம்

காப்பியங்களைப் பெருங்காப்பியம் சிறுகாப்பியம் என இரு வகையாகப் பிரிப்பர். கவியால் இயற்றப்படுவன காவியம் எனலாம். சமஸ்கிருதத்தில் 'காவ்யம்' என்ற சொல்லும் பாலிமொழியில் 'காவெய்யா' என்ற சொல்லும் கவிதை என்ற சொல்லையே குறிக்கின்றன. தண்டியலங்காரம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் அமைவது பெரும் காப்பியம் எனவும் அவற்றுள் ஒன்றோ பலவோ குறைந்தால் அது சிறு காப்பியம் எனவும் பெருங்காப்பியம் மற்றும் சிறுகாப்பியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது.

'பெருங்காப் பியநிலை பேசுங் காலை

வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றின் ஒன்று

ஏற்புடைத்தாகி முன்வர இயன்று

நாற்பொருள் பயக்கும்நடைநெறித்து ஆகித்'

அவ்வகையில் அழகோவியமானது அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் பயின்று குறுங்காவியத்தின் இலக்கணத்திற்கு ஏற்ப அமைந்துள்ளது (Varatharasan, 2006).

## அழகோவியத்தின் கதைசுருக்கம்

முருகன் மற்றும் வள்ளி தம்பதியர் பார்புகழும் சிங்கை நகரை உருவாக்கிய சிற்பிகளுள் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களது இல்லற வாழ்வின் பரிசாக வள்ளிக்கு ஓர் ஆண்மகவு பிறக்கிறது. உலகிலுள்ள அழகொல்லாம் ஒன்றாகத் திரட்டியதுபோன்று அக்குழந்தை அழகே வடிவாகப் பிறந்தது.

ஆனால் வள்ளியோ இவ்வழகை இரசிக்குமுன்பே பிரசவத்தில் கண்களை நிரந்தரமாக மூடிவிட்டாள். தன் உடலின் உயிர்நாடியை இழந்தது போன்று இன்னலுற்றான் முருகன். மகன் இழந்த தாயின் தாய்மையையும் தன்னோடு இணைத்துக்கொண்டு அம்மை அப்பனாக உருவெடுத்து, தன் குழந்தைக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து அவனுக்கு வேலன் எனப் பெயரிட்டுச் சீராட்டித் தாலாட்டி அவனை வளர்த்து வந்தான். வேலனும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கட்டிளம் காளையாக உருவெடுத்தான். அக்காலக்கட்டத்தில் சிங்கையின் மீது ஜப்பானியர் போர் தொடுத்தனர். அப்போரின்போது முருகன் போர்க்களத்தில் போரிட்டு வீரமரணம் அடைந்தான்.

வேலன் தன் தந்தையை இழந்து ஆதரவற்ற நிலையில் அல்லலுற்றான். திருமண வயதை எட்டிய அவனுக்கு மணம் பேச உறவினர்கள் ஊரெங்கும் பெண் தேடினார்கள். ஆனால் அவனோ வெண்ணிலவு என்ற மானின் காதல் வலையில் சிக்கி அவளையே மணம் முடித்தான். அவர்களின் இன்ப வாழ்க்கைக்கு அடையாளமாக வெண்ணிலவு தாய்மையுற்றாள். அவ்வேளையில் இந்தோனேசியா சிங்கப்பூர் மீது போர்தொடுக்க முனைந்தது. தந்தை வளர்ப்பில் பொறுப்பான நற்குடிமகனாக வளர்ந்த அவன் தன் தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நாட்டைக் காக்கும் நற்குடிமகனாய் போருக்குப் புறப்பட்டான். பேறுகாலம் நெருங்கி வெண்ணிலவு ஆண்மகவு ஒன்றை ஈன்றெடுக்கிறாள். போர்க்களத்தில் நாட்டுக்காக வீரத்துடன் போராடி வெற்றிவாகைசூடி வீடுதிரும்பிய தன் ஆருயிர் கணவனுக்குத் தன் அன்புப் பரிசாக அக்குழந்தையை அளிக்கிறாள். அக்குழந்தைக்கு அவன் 'அழகு' என்று பெயர் சூட்டுகிறான். அதுவே அழகோவியமாக உதயமானது.

## புதைந்து கிடக்கும் மரபியல் முத்துகள்

'காலம் என்பது மாயை. அதைக் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எனப் பிரிப்பது அறியாமை என்பர் சில அறிஞர்கள், ஆனாலும் தேவைப்படுகிறது' எனக் காலத்தின் அருமையைப்பற்றிச் சொல்வேந்தர் சுகிசிவம் அவர்கள் கூறியுள்ளார்கள். இல்லாத காலத்தைப் பல பகுதிகளாகப் பிரிப்பது அசட்டுத்தனம் என்றாலும் அது வாழ்க்கையைப் பகுத்தறிய தேவைப்படுகிறது. காரணம் எதிர்காலத்தில் ஒளிமயமாகத் துலங்கக்கூடிய நாளைய நட்சத்திரங்களுக்கு நேற்றைய உலகம் எப்படி இருந்தது என்பது தெரியாமல் போகக்கூடாது. இன்றைய வாழ்க்கை அனுபவங்கள்தான் நாளைய தலைமுறையினருக்கான பாடமாக அமையலாம். அவற்றையெல்லாம் மீண்டும் ஒருவன் பட்டுத்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால் அதில் இழப்புகள் தான் அதிகம் மிஞ்சும். எனவே நம் முன்னோர்கள் சரி என உணர்ந்தவற்றை மரபார்ந்த அம்சங்களாக அடுத்த தலைமுறையினருக்கு இலக்கியங்களின் வாயிலாக வகுத்துத்தந்துள்ளனர். அத்தகைய சில சிந்தனைகள் அழகோவியத்தில் நூலிழைப்போல் விரவிக்கிடக்கின்றன. அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம்.

## நிலையாமை

செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என நிலையாமையின் பல்வேறு கூறுகளை இலக்கியங்கள் மக்களுக்கு எடுத்துரைத்துள்ளன. அவற்றுள் யாக்கை நிலையாமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சங்க இலக்கியங்கள் முதல் செவ்விலக்கியங்கள் வரை வாழ்க்கையின் நிலையாமையைப்பற்றிப் பல்வேறு கோணங்களில் கூறியிருக்கின்றன. முடிவுடை மன்னனாக இருந்தாலும் இறக்கும்போது அவனுடைய நாடு அவனுடன் செல்லாது எனபதனை

'அந்த ஆறு மண்டிலமாயினும் தம்மோடு செல்லா'

எனப் புறநானூறு யாக்கை நிலையாமைப்பற்றி எடுத்துரைத்துள்ளது (Swaminatha Iyer, 1971). அதுபோன்றுதான் பாத்தென்றல் அவர்களும் யாக்கை நிலையாமையை ஔவையின் வழிநின்று பாடியுள்ளார். வந்தவரெல்லாம் இந்த மண்ணில் நிலையாகத் தங்கிவிட முடியாது. ஆளுக்கொரு தேதி வைத்து 'அவன்' அழைத்துச் செல்வதை யாராலும் தடுத்துவிட முடியாது. அன்பெனும் பிடிக்குள் அகப்பட்டு வாழ்ந்தனர் முருகனும் வள்ளியும். அழகானதொரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்து விட்டுத் தன் கடமை முடிந்தது எனக் காற்றாய்க் கற்பூரமாய் மறைந்து விடுகிறாள் வள்ளி. ஆருயிர்

மனைவியின் இழப்பைத் தாங்க முடியாமல் புழுவாய்த் துடித்துப் போகிறான் முருகன். அந்நிலையை ஆசிரியர் கூறுகையில்

“ஆண்டாண்டு காலமெல்லாம் அழுதிட்டாலும்

அழிந்த உயிர்க்காக உயிர் கொடுத்திட்டாலும்

மாண்டவர்கள் வருவதில்லை என்று சொன்ன

மாண்புக்க ஔவை உரை மறக்கலாமோ

கூண்டு விட்டுச் சென்றபுறா வருதல் கூடும்

குஞ்சுவந்த முட்டையிலே மீண்டும் வேறொர்

வாண்டு வந்து பிறப்பதில்லை முருகா!"

எனக் கற்போர் அனைவரும் கசிந்துருகும் வண்ணம் வள்ளியின் இறப்பின் வாயிலாக நிலையாமையின் இயல்பை உணர்த்தியுள்ளார் (Murugadasan, 1990). மனித உயிரானது நிலையற்றது என்பதனைப் பல்வேறு உவமைகளின் மூலம் மக்களுக்கு விளக்கியுள்ளார். நிலையற்ற இவ்வுலகில் நிலையானது என்பது உண்மையான அன்பு ஒன்றுதான் என்பதனை இக்குறுங்காவியம் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார்.

“ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்

மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா!

நமக்கும் அதுவழியே! நாம்போம் அளவும்

எமக்கென்னென் றிட்டுண் டிரும்"

என்ற ஔவையின் நல்வழி பாடலுடன் பாத்தென்றலின் யாக்கை நிலையாமை பாடல் வரிகளின் பொருண்மையின் ஒற்றுமையினை இங்குக் காணலாம் (Venkatasamy Nattar, 2010).

## குழந்தை வளர்ப்பில் தந்தையின் கடமை

பச்சிளம் குழந்தையாம் வேலன் தன் தாயை இழந்து தந்தையின் அரவணைப்பில் வாழ்ந்து வருகிறான். அவனை அல்லும் பகலும் அயராது கண்விழித்துச் சீராட்டி வளர்க்கிறான் முருகன். அவனது தியாக உள்ளத்தை, பொறுப்புணர்வை மற்றும் கடமையைக் கூறுமிடத்து ஆசிரியர் குழந்தைப் பல்வேறு குறும்புகள் செய்யும் போதெல்லாம் அதனைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்கிறான் முருகன் என ஒரு தந்தையின் கடமையை விளக்குகிறார்.

“அரும்பான வேலவனும் அப்பன் தந்த

அழகு பொம்மை விளையாடி, தத்தித் தத்தித்

விரும்பாத செயல் செய்த போதும், தந்தை

விலாநோவ மகிழ்ச்சியினால் சிரித்துக் கொள்வான்,

கரும்பாக, கனியாக கங்குள், காலை

கண்விழித்துக் காத்ததினால் ஐந்தாண் டுக்குள்

துரும்பாகத் தேய்ந்துவிட்டான் முருகன்”

எனச் சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்து கன்னித்தமிழில் ஒரு தந்தையின் கடமையைப்பற்றி உலகறிய செய்துள்ளார் (Murugadasan, 1990). தன்னுடலைப்பற்றிக் கவலைப்படாமல் மகனின் நலனில் அக்கறைகொண்டதால் இவன் துரும்பாக இழைத்துவிட்டான் என்று கண்துஞ்சாது

சிறந்த தந்தையாகத் தன் மகனை வளர்த்துப் பின்னாளில் அவனை நாட்டிற்குச் சேவையாற்றும் வீரமகனாக வளர்த்த பெருமைக்குரிய கதாப்பாத்திரமாக முருகன் பாத்திரத்தினைப் படைத்துள்ளார்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே,

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே,

வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே,

நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே,

ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்,

களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்ற பொன்முடியாரின் புறநானூற்றுப் பாடலுக்கு ஒப்ப, தன் மகனைச் சான்றோனாக்குகிறான் முருகன் (Swaminatha Iyer, 1971). காலத்தின் கண்ணாடிதான் இலக்கியங்கள் என்ற உண்மையினை அக்கால இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள் வரை பறைசாற்றி வருகின்றன. குழந்தையைப் பெற்றெடுப்பது தாயின் கடமை என்றால் அதனைச் சான்றோனாக மாற்றுவது தந்தையின் கடமை என்று அன்றே தந்தையின் கடமையினைப்பற்றித் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளது இப்பாடல். பாத்தென்றல் அவர்களும் முருகனின் கடமையைச் சொல்லோவியமாக வடித்துள்ளார். பிள்ளைகளைப் பேணி வளர்த்தல்தான் இல்லறத்திற்கு அழகு என்று இவ்வழகோவியத்தில் தந்தையின் கடமையை அழகுற எடுத்தியம்பி தமிழ்மரபிற்குக் கூடுதல் உரமளித்துள்ளார் பாத்தென்றல்.

## சமுதாயச் சிந்தனைகள்

இலக்கியம் என்பது வெற்று வெளியிலிருந்து பெறப்படும் ஒன்றல்ல; மாறாக அது ஒரு குறிப்பிட்ட சமுதாயச் சூழலில்தான் பிறக்கிறது. அத்தகைய இலக்கியம் ஒரு சமுதாய அமைப்பில் சமுதாயத்தின் வளர்சிக்கானப் பாதைகளைக் காட்டும். குறிப்பிட்ட சமுதாயத்தின் பின்புலத்தில் பிறக்கிற இலக்கியம், அந்தச் சமுதாயத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ புலப்படுத்தும். அவ்வகையில் அழகோவியத்தில் இடம்பெற்றுள்ள சமுதாயச் சிந்தனைகளுள் ஒருசிலவற்றை இங்குக் கண்போம்.

## இயற்கையைப் பேணுதல்

சிறிய மீன்பிடி கிராமமாக இருந்த அன்றைய சிங்கை நாட்டை உருவாக்குவதற்குக் காடுகளை அழிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. நிலப்பற்றாக்குறையுடைய சிங்கையில் காடுகளை அழித்துதான் மாட மாளிகைகளை எழுப்ப முடியும். இலாப நோக்கிற்காக இல்லாமல் மக்களின் நல்வாழ்விற்காக மாளிகைகளைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற நோக்கத்தில் காட்டை அழித்து கண்ணைக் கவரும் வானுயர் கட்டடங்களை உருவாக்கினர் அன்றைய சிங்கை மக்கள். இதனையே காடுகளை அழித்தால் பூமித்தாய் கண்ணீர் விடுவாள்; அவள் அழுகையைப் போக்க வேண்டுமெனில் அந்த இடத்தில் அழகிய மாளிகைகளை உருவாக்க வேண்டும் எனக் கற்பனை நயத்துடன் இயற்கையைப் பேணுதலின் அவசியத்தினை நயம்படப் பாடியுள்ளார்.

"காடழிந்தால் பூமி அழுவாள் என்று

கண்பறிக்கும் வண்ணமுடன் மனைகள் செய்தான்

ஆடிவரும் வெள்ளலைக்கும் அணைகள் கட்டி

அழகொழுகும் துறைமுகமாய் ஆக்கி வைத்தார்"

என்று காடுகளைத் தேவையில்லாமல் அழித்தல் கூடாது என இயற்கையைப் பேணுதலில் அவசியத்தை உணர்த்துகிறார் (Murugadasan, 1990). வளர்ந்து வரும் தொழில்நுட்ப முறையானது மனிதர்களுடைய வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துள்ளது. தமிழர்ப் பண்பாடு என்பது

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்வதே ஆகும். இதனை அக்கால இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள் வரை சுட்டிக்காட்டி உள்ளன. மனிதன் இன்று தன் வசதிக்காக இயற்கையை அழித்து வருகிறான். இதனால் இன்று பல்வேறு இயற்கைப் பேரிடர்களுக்கும் தொற்று நோய்களுக்கும் ஆளாகி அல்லலுறும் நிலை உருவாகியுள்ளது. இதனைத் தடுக்கப் பல்வேறு இயற்கை ஆர்வலர்கள் காடுகளைப் பாதுகாப்பதற்கும் கூடுதல் மரங்களை நடுவதற்கும் அறிவுறுத்தி வருகின்றனர். ஐம்பூதங்களின் சேர்க்கைதான் உலகம் என்பதை,

“நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும்

கலந்த மயக்கம் உலகம் ஆதலின்

இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்

திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்”

என்று கூறுகிறது தொல்காப்பியம் (Vellaivaranan, 2015). இயற்கையைப் பாதுகாப்பது நம் கடமை என்னும் சமுதாயச் சிந்தனையைப் பாத்தென்றல் தம் குறுங்காவியத்தின் மூலம் தொழில்நுட்ப யுகத்தில் வாழும் இளம் தலைமுறையினருக்கு உணர்த்துகிறார்.

## பெண்கல்வியின் சிறப்பு

ஓர் ஆண் கல்வி கற்றால் அது தனிமனித வளர்ச்சிக்கு வழிவகுக்கும்; மாறாக ஒரு பெண் கல்வி கற்றாளென்றால் அக்குடும்பமே கல்வி செல்வத்தைப் பெற்றதற்கு ஒப்பாகும். இன்றைய நவீன உலகில் பெண்கல்வி மனித வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது. தனிமனிதனை மட்டுமின்றி ஒரு சமுதாயத்தையே அறிவுசார்ந்த சமுதாயமாகவும் அன்புள்ள சமுதாயமாகவும் மாற்றவல்ல கருவிதான் பெண்கல்வியென்றால் அது மிகையாகாது. குடும்பத் தலைவியாக விளங்குபவள்தான் தன்னுடைய குழந்தைக்கு வேண்டிய அறிவையும் பண்பாட்டையும் வழங்குதில் அடித்தளம் அமைக்கிறாள். ஒரு நாடானது அதன் வளர்ச்சிப்பாதையில் முன்னெடுத்து செல்ல வேண்டுமானால் அந்நாட்டு மக்கள் கல்வியறிவில் சிறந்து விளங்க வேண்டும். இதற்குப் பெண்கல்வி அவசியம் என்பதனை நன்குணர்ந்த படைப்பாளி முருகனுக்குப் பெண் பாரக்கும்போது, மேற்கொண்ட இடர்பாடுகளைக் கூறுகையில் பெண்களிடம் கல்வியில்லாததைக் குறையாகக் காண்கிறார்.

“பொன்னிருந்தால் பெண்மைக் காட்டும் அழகே இல்லை

பின்னலிடா குதிரையின்வால் சடையால் தொல்லை

கண்ணிருந்தால் கல்வியென்ற மணிகள் இல்லை

கருமையென்ற நிறமெடுத்த தோலில் தொல்லை”

பெண்களுக்குக் கல்வி என்பது இருந்தால்தான் குடும்பம் சிறக்க அவர்களால் நன்மக்களை உருவாக்க முடியும் (Murugadasan, 1990). குடும்பம் சிறந்து விளங்கினால் எதிர்காலச் சமுதாயம் வளமானதாக அமையும் என்று பெண்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கிறார். இதனையே பாரதிதாசன் தன் குடும்பவிளக்கில் கல்வி கற்காத பெண்களைக் களர் நிலம் என்று சாடுகிறார்.

"கல்வியில் லாத பெண்கள்

களர் நிலம்: அந்நிலத்தில்

புல் விளைந்திடலாம்; நல்ல

புதல்வர்கள் விளைதல் இல்லை!"

கல்வி இல்லாத பெண்களால் சமுதாயத்தில் அறியாமைதான் நிலவும் என்ற கருத்தைக் புரட்சிகவி இவ்வாறு முன்வைத்துள்ளார் (Bharathidasan, 1950). பெண் கல்வி என்பது ஒரு நாட்டின்

எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் முக்கியக் காரணியாக விளங்குகிறது. எனவே பெண்கள் கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை இக்குறுங்காவியத்தில் எடுத்துரைத்துக் கல்விபற்றிய சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

## அறவியல் சிந்தனைகள்

ஒல்காப் புகழ்பெற்ற தமிழ் இலக்கியங்கள் அனைத்துமே அற இலக்கியங்கள் என்று கூறினால் அது மிகையாகாது. ஏனெனில் அறம் பாடுவதையே வாழ்க்கையின் இலக்காகக் கொண்டவர்கள்தான் நம் கவிஞர்கள். சமூகப் போக்கில் மாறுதல்கள் விளைய வேண்டும் என விரும்பிய சான்றோர்கள் அறநூல்களை வரைந்தனர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் அறநூல்கள். இவை அக்காலப் பண்பாட்டை உருவாக்கப் பெரிதும் காரணமாயிருந்தன. மனிதநேயம் மக்களிடையே தொடர்வதற்கும் மனிதன் மனிதனாக இல்வாழ்க்கையில் மேம்பட்டு விளங்குவதற்கும் அறச்செயல்கள் மிகவும் முக்கியமானவையாக அமைகின்றன. அன்பு, ஒழுக்கம், ஈகை போன்ற பல்வேறு அறப்பண்புகளைத் தமிழர்கள் தங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக மட்டும் கொள்ளாமல் வாழ்க்கை முழுதும் கடைப்பிடித்து வருகின்றனர். ‘அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே’ என்ற தண்டியலங்கார நூற்பாவானது சிறந்த இலக்கியம் என்பது அதனைக் கற்பவர்களை அறமும், பொருளும், இன்பமும், வீடும் அடையுமாறு செய்வித்தல் வேண்டும் என்று கூறுகிறது. இவ்விலக்கணத்திற்கு ஏற்ப அழகோவியமானது அக்காலச் சிங்கை மக்களின் அறவாழ்க்கையை அவர்களது அகவாழ்க்கை வாயிலாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

## திருமணம்

முருகன் வள்ளியைக் காதலிக்கிறான். தமிழரின் வாழ்வியல் கூறுகளில் திருமணம் என்பது முக்கியமான சடங்காகும். காதல் என்பது கற்பு வாழ்க்கையில் ஒழுக வேண்டும். அப்போதுதான் அது அறவாழ்க்கையாக மாறுகிறது. இதனையே ‘அறத்தொடு நிற்றல்’ என்று சங்க இலக்கியமும் கூறுகிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்பதைத் தமிழர்கள் தங்கள் வாழ்வின் உயரிய விழுமியமாகக் கொண்டனர். தொல்காப்பியமும் கற்பு என்பது முறைப்படி திருமணம் புரிந்து இல்வாழ்க்கையில் ஈடுபடுதல் என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருமணத்தின் அவசியத்தினை உணர்த்திச் சென்றது.

“கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்

கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுமே”

இவ்விலக்கணத்திற்கு இணங்க முருகன் தன் காதல் வாழ்க்கையைக் கற்பு வாழ்க்கையாக மாற்றுவதற்காகப் பெண் கேட்டு அவளது வீட்டிற்குச் செல்லும் காட்சியினைச் சொல்லோவியமாக அழகுற வடித்துள்ளார் (Ilampuranar, 2019).

"அரும்பாகி மொட்டாகி னாலும், காதல்

அழகான மலராக வேண்டும் அன்றோ?

கரும்பான அந்நாளைக் குறிக்க லானார்

கண்ணழகி வெண்ணிலவின் தந்தை தாயார்”

காதலானது திருமணத்தில் முடிவதற்காக முறைப்படி வேலன் வெண்ணிலவைப் பெண் கேட்க அவளது வீட்டிற்குச் செல்கிறான் (Murugadasan, 1990). திருமண தேதியும் குறிக்கப்படுகிறது. சங்க காலத்திலும் திருமண சடங்குகளை நிமித்தம் பார்த்து நடத்தினர் என்பதற்கு அகப்பாடல் சான்று பகர்கிறது. திருமணத்தின் போது மணப்பெண்ணை வாழ்த்தும்போது மக்களைப் பெற்ற மங்கல மகளிர் நால்வர் கூடி நின்று மணப்பெண்ணுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளை எல்லாம் செய்து பின்னர்

'கற்பொழுக்கத்திலிருந்து சிறிதும் வழுவாமல் பல உதவிகளைக் கணவனுக்குச் செய்து உன் கணவனைப் பெரிதும் விரும்புவாயாக' என்று வாழ்த்தி நீரில் நெல்லும் மலரும் கலந்து வதுவையை நீராட்டினர் என அகப்பாடல்- 86 கூறுகிறது (Jeyabal, 2004).

பாத்தென்றல் திருமண நாளை 'கரும்பான நாள்' என்று உவமைநயத்துடன் கற்போர் மனத்தில் தெவிட்டா இன்பமளிக்கும் வகையில் பாடியுள்ளார். இவ்வாறு தமிழர் வாழ்வில் காதல் வாழ்க்கை என்பது கற்பு வாழ்க்கையாக மாற வேண்டும் என்பதைத் தங்கள் வாழ்க்கையின் உயரிய விழுமியமாகக் கொண்ட சிங்கை மக்கள் கற்பு நெறியில் வாழ்ந்து சமுதாயத்தில் அறத்தை நிலைநாட்டினர் என்பதனை இப்பாடல் வரிகள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். இல்வாழ்க்கையில் இணைந்த முருகனும் வளளியும் அன்பெனும் சங்கிலியால் பிணைக்கப்பட்டு அறத்தின் வழி நின்று மாண்புற ஒழுகினர்.

## மக்கட் பேறு

அழகையும் ஆடம்பரத்தையும் நாடி, தங்கள் வாழ்க்கையின் அர்த்தத்தை இழந்து எங்கெங்கோ அலைந்து திரியும் சில இளம் தலைமுறையினருக்கு அழகு என்றால் குழந்தைச் செல்வம் தான் என்பதனை எடுத்துரைத்துள்ளார் ஆசிரியர். வேலனும் வெண்ணிலவும் வாழ்ந்த அன்பு வாழ்க்கையின் அர்த்தமாக வெண்ணிலவு கருத்தரிக்கிறாள். அவள் தன் கணவரிடம் அடிக்கடி 'அழகு' என்றால் என்ன என்று கேட்பதுண்டு. அதற்கு அவன் ,

"இப்படி யாய் நாமிருவர் பேசிப் பேசி

ஏழுமாதம் முடித்துவிட்டோம்; பத்தாம் மாதம்

ஒப்பறியா பேரழகுக் குழந்தை ஒன்றை

சித்திரம் நீ பெற்றிடுவாய், அதுவே இங்கு

எப்பொழுதும் நல்லழகாய் வாழும் கண்ணே"

என்று தனக்குப் பிறக்கப்போகும் குழந்தைதான் அழகிற்கான இலக்கணம் என அழகிற்குப் புது இலக்கணம் வகுத்துள்ளார் (Murugadasan, 1990).

மழலைச் செல்வத்தின் மாண்பினைப் பாடாத இலக்கியங்களே இல்லை எனலாம். அத்தகைய பாடல்களில் மக்கள் மனத்தில் இன்றும் நீங்கா இடம் பிடித்த அழகோவியமாக விளங்கும் பாடல் சங்க இலக்கியத்தின் புறப்படலாம் புறநானூற்றில் பாண்டியன் அறிவுடைநம்பியின் பாடலாகும். குழந்தைச் செல்வத்தின் மாண்பினைக் கற்போர் மனம் உவக்கும் வண்ணம் அமைத்துள்ள பாங்கு இன்புறத் தக்கது. இன்றைய சிங்கப்பூர் சூழலுக்கு அவசியமான பாடல் என இதைக் கருதலாம். ஒன்றிரண்டல்ல, மூன்றாவது குழந்தைக்குப் பள்ளிச் சலுகை, சேமிப்பு நிதியில் உயர்வு, தாயோடு தந்தைக்கும் மருத்துவ விடுப்பு, வருமான வரிச் சலுகை எனச் சிங்கை அரசு மக்களிடையே குழந்தைச் செல்வத்தின் அவசியத்தை உணர்த்துவதற்குப் பல்வேறு சலுகைகளை வாரி வழங்குகின்ற நிலையில்

"படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்

உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்

குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி

இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்

நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்

பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே"

என்ற பாடல் பொருத்தமுடையதாக அமைகிறது

குழந்தை நடைபயில்வதைக் குறிக்கக் ‘குறுகுறு நடந்து’ என அமைந்திருக்கும் தொடர் மிகப் பொருத்தமான ஒன்று (Swaminatha Iyer, 1971). இதை விடுத்து வேறு எந்தத் தொடரும் இதற்கு இணையாகாது. இப்பாடலில் உணர்ச்சிபூர்வமான ஒரு தொடர் ‘மயக்குறு மக்களை’ என்பதே. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உளவியல் அடிப்படையில் குழந்தைச் செல்வம்பற்றி விளக்கியிருப்பதை எண்ணும்போது நம் முன்னோர்களின் நுண்மான் நுழைபுலம் தெற்றென விளங்குகிறது. அவ்வகையில்தான் சிங்கை பாத்தென்றல் அவர்களும் இளம் தலைமுறையினருக்குக் குழந்தை செல்வத்தின் முக்கியத்துவத்தை அவர்கள் மனத்தில் ஆழப் பதித்து இக்குறுங்காவியத்தின் தலைப்பாக அதனையே வைத்துள்ளது ஆசிரியரின் கவிதை திறனுக்குக் கட்டியம் சேர்க்கிறது.

## போர்க்குணம்

தமிழர்தம் அறவாழ்க்கையோடு நாட்டுப்பற்றையும் முன்னெடுத்து சென்றனர் என்பது இலக்கியங்கள் காட்டும் மறப்பண்பாகும். காதலும் வீரமும் சங்கத்தமிழர்களின் இரு கண்கள் என்பதன் பொருண்மையை உணர்ந்து நாட்டிற்காகப் போர்க்களம் சென்று போரிடுவது என்பது ஆண்மகனின் தலையாயக் கடமைகளில் ஒன்றாக அன்று முதல் இன்று வரை சிங்கையில் கருதப்பட்டு வருகிறது. தன் மகனைப் போர்க்களத்தில்தான் பார்க்க முடியும்; அவனைப் பாரக்க வேண்டுமென்றால் அங்குச் சென்று பார் என்று மறத்தமிழச்சி பெருமையுடன் தன் மகன் போர்க்களம் சென்று போரிடுவதனைக் கூறுவதாகப் புறநானூற்றுப் பாடல் எடுத்தியம்புகிறது.

“சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்

யாண்டு உளனோஎன வினவுதி என்மகன்

யாண்டஉளன் ஆயினும் அறியேன் ஓரும்

புலிசேர்ந்து போகிய கல்அளை போல

ஈன்ற வயிறோ இதுவே

தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே”

என்ற பாடல் வரிகளுக்கு இலக்கணமாகச் சிங்கை மக்கள் வாழ்ந்துவருவதனை இக்குறுங்காவியத்தின் வாயிலாக ஆசிரியர் இலக்கிய உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளார் (Swaminatha Iyer, 1971). போர்க்காலங்களில் நாட்டைக் காப்பாற்றுவது ஆண்மகனின் கடமை என்பதைச் சிங்கை குடிமக்கள் அன்றே உணர்ந்தனர் என்பதனைக் குறுங்காவியத்தின் மூலம் வெளிக்கொணர்ந்து இதனை வரலாற்றுக்காவியமாக மாற்றியுள்ளார் பாத்தென்றல். அக்காலகட்டத்தில் சிங்கை நாட்டின் மீது ஜப்பானியர்கள் படையெடுத்தனர். இதனால் சிங்கை மக்கள் பல்வேறு அவலங்களுக்கு ஆளாகினர். உணவு, உறைவிடம், பாதுகாப்பு போன்ற அடிப்படை வசதிகள் எதுவுமின்றிக் காடுகளில் பாதுகாப்பிற்காகத் தஞ்சம் புகுந்தனர். ஜப்பானியர்கள் குண்டு மழைகளை ஈவிரக்கமின்றிப் பொழிந்தனர். நாட்டைக் காப்பாற்றப் புறப்படும் வீரமகன்களில் முருகனும் ஒருவன். எதிரிகளை முருகன் போரில் சந்திக்கிறான். அவனது மார்பை ஜப்பானியர்களின் குண்டு துளைக்க விழுப்புண் ஏந்தி தன் இன்னுயிரைத் துறந்து மண்ணில் சாய்கிறான். பட்ட காலிலேயே படும் என்பதுபோல தாயை இழந்த வேலன் தந்தையையும் இழந்து பரிதவிக்கும் நிலை ஏற்படுகிறது.

“யார் மணப்பார் வெற்றிமகள் அழகை என்று

யாருமறியா திருந்தவேளை; ஓர்நாள்

சீறி வந்து போர் தொடுத்தான் குள்ள ஜப்பான்,

சீரிலங்கும் சிங்கைநகர் அமைதி கொன்றான்,

கூரரிவாள் கையெடுத்துப் பனங்காய் சீவும்

கொள்ளையராய் சிசுக்களையும் கொன்றார் பாவி!

அக்கொடிய நாளையிலே அழகு வேலன்

அப்பனையும் கொன்று விட்டார்; அந்தோ!"

என உயிரோட்டமாய் அன்னியனின் காலில் மிதிபடாமல் தன் நாட்டைக்காக்க இன்னுயிர் நீத்த முருகனின் நாட்டுப்பற்றை உணர்த்திச் சிங்கையின் வரலாற்றையும் வெளிப்படுத்தியுள்ளார் (Murugadasan, 1990). இவ்வாறு அன்றிலிருந்து இன்றுவரை நாட்டுப்பற்றானது சிங்கை மக்களிடம் மேலோங்கியிருப்பதனை இக்குறுங்காவியம் படம்பிடித்துக்காட்டுகிறது. இன்றும் சிங்கையில் பதினெட்டு வயதிற்கு மேல் ஆண்மகன்களுக்குக் கட்டாய தேசிய சேவை வழங்கப்படுகிறது. இதனால் உலகின் பாதுகாப்பான நாடுகளின் வரிசையில் சிங்கையும் ஒன்று என்பது சிங்கப்பூரர்களுக்குப் பெருமையளிக்கக்கூடிய ஒன்றாகும். ஒரு நாட்டின் பாதுகாப்பு என்பது அந்நாட்டு அரசாங்கம் வகுக்கும் திட்டங்களைப் பொறுத்து அமையும் என்பதற்கேற்ப மிகச் சிறிய நாடான சிங்கை பாதுகாப்பு அம்சத்தில் சிறந்து விளங்குவதற்கு அதன் தேசிய சேவை முக்கியப் பங்காற்றுகிறது என்பதை இக்குறுங்காவியத்தின் மூலம் ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார். இவ்வாறு சிங்கை மக்கள் தேசப்பற்றுடன் நாட்டுக்குத் தொண்டாற்றி அறவாழ்க்கையில் ஈடுபட்ட வரலாற்று செய்தியைக் காலமெனும் வரலாற்றில் அச்சிட்டுள்ளார் படைப்பாளர்.

## அழகோவியத்தின் இலக்கியச் சிறப்புகள்

இலக்கியம் என்பது ஓர் அரிய கலை. இக்கலை அழகுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அமைவது ஆகும். அழகு பார்ப்பவரைக் கவரும் தன்மையுடையது. இலக்கியத்தின் சிறப்பியல்புகளான உவமை, அணி, கற்பனை, இயற்கை வருணனை, சந்தம், வடிவம், சுவை, சொல்லழகு எனப் பல அழகுகளின் ஒருமித்த வெளிப்பாடாக இக்குறுங்காவியம் படைக்கப்பட்டுள்ளது. இலக்கியத்திற்கு அழகு என்பது அதனைப் படிப்பவரையும் கேட்பவரையும் ஈர்க்கும் வண்ணம் அமைவதே ஆகும். 'அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே' 'ஒவ்வோர் அடியும் தன்னளவில் நிறைவும் வலிமையும் பெற்றிருக்க வேண்டும்' என அடிகளின் சிறப்பை விளக்குகிறது தொல்காப்பியம் (Natarasan, 2008). கவிதைக்கு அணி சேர்ப்பன அதன் அடிகளே. அழகோவியம் எண்சீர் விருத்தத்தாலான கழிநெடிலடி ஆசிரியப்பா வகையில் அமைந்து இழுமென் மொழியால் விழுமியது பயக்கின்றது. பாடல்களை அடிகள் தோறும் எண்சீர்கள் அமைத்து இரண்டு அடிகளாக அமைப்பது 'எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகும்'. அழகோவியமும் இப்பாவகையில் அமைந்துள்ளது. அடிதோறும் முதலெழுத்து ஒன்றி மோனை நயத்துனும் அடியின் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி எதுகை நயத்துடனும் இக்குறுங்காவியம் அமைந்துள்ளது.

"பார்புகழும் சிங்கைநகர் பண்டைநாளில்

பாழ்விலங்கின் வாழ்விடமாய் இருந்த காடு

வேர்வையெனச் செங்குருதி மண்ணில் கொட்டி

விண்ணளக்கும் மாளிகையும் அழகுச் சாலை

சீர்கொடுக்கச் செய்யுதற்கு, ஆங்கிலேயர்

செந்தமிழர் கூட்டமதைக் கப்பலில் ஏற்றி"

என்னும் அடிகளைச் சான்றாகக் கொள்ளலாம் (Murugadasan, 1990).

## ஓசை நயம்

'ஓசை நயம் இன்பம் உவமையிலா இன்பம்' என ஓசை நயத்தின் சிறப்பினைப் பாரதியார் கூறியுள்ளார். அழகோவியத்திற்கு அழகு சேர்ப்பது அதன் ஓசை நயம் என்றால் அது மிகையாகாது. கவிதை என்பது ஓசை நயத்தோடு அமைந்திருக்கும். அதற்கேற்பக் கவிதையில் முன்னும் பின்னும்

சொற்களைத் தொடுப்பதால் அது தொடை எனப்படுகிறது (Pachaibalan, 2013). ஓசைநயம் என்பது எதுகை, மோனை, சந்தம், ஆகிய கூறுகளை உள்ளடக்கி உள்ளது.

"சென்று வருகின்றேன் செவ்வாய்க் கனியமுதே

வென்று வரவே விடையளிப்பாய் வெண்ணிலவே

கூவ நினைக்கும் கொடுங் கழுகுக் கூட்டமதைச்

சாவின் மடியில் சதிராட விட்டுவிட்டு"

சென்று, வென்று, என எதுகை நயத்துடன் பாடல் வரிகளைப் படைத்து கற்போர் மனத்திரையில் அழகுறப் பதித்துள்ளார் (Murugadasan, 1990).

## சொல் நயம்

கவிதைக்கு அழகூட்டுவது அதன் சொற்களே. சிறந்த படைப்பாளி என்பவன், எவ்வாறு பத்தனானவன் தரமான முத்துக்களைத் தேர்ந்தெடுத்து அழகான முத்துமாலை ஒன்றைக் கோர்ப்பானோ அதேபோன்று சொற்களைத் தேர்ந்தெடுத்துத் தன் படைப்பிற்கு உயிரூட்டுவான். 'கவிதையின் பாடுபொருளுக்கும் பாடுகளத்திற்கும் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துவதே சொல் நயம் எனப்படுகிறது' இது சொல்லாட்சி எனவும் அழைக்கப்படுகிறது (Pachaibalan, 2013). இது கவிஞரின் மொழியாற்றலைப் புலப்படுத்துவதோடு வாசகர்களைக் கவிதையின்பால் ஈர்க்கும் தன்மையுடையது. இயற்கையின் எழில் கொஞ்சும் அழகையும் உழவனின் மாண்பையும் பாட வந்த பாத்தென்றல், உலகில் உள்ள பொருட்களில் எவை எல்லாம் அழகு என்று பட்டியலிடுகிறார். 'உழவன் சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும்' என்ற பழமொழிக்கு ஏற்பப் பகல் முழுவதும் வயல் வெளியில் உச்சிவெயிலில் உழைத்து வீடு திரும்புகிறான் உழவன். இந்த உழவுத் தொழிலை அவன் எந்தக் கல்லூரியிலும் சென்று கற்கவில்லை; அப்படியிருக்கக் கற்றவர் எல்லாம் அவன் கையைத்தான் எதிர்நோக்கியிருக்கிறார்கள் என்ற உண்மையினைத் தேர்ந்தெடுத்த சொற்களால் சொல்லோவியமாக வரைந்துள்ளார். அனைவருக்கும் உணவளிக்கும் உழவன் தன் வீட்டில் வெறுந்தரையில் தூங்குவதுதான் அழகு என்று ஆடம்பரத்தை நோக்கி அல்லும் பகலும் ஓய்வின்றி உழைத்து, இளமையிலேயே பல்வேறு நோய்நொடிகளுக்கு ஆளாகி அல்லலுறும் இன்றைய இளம் தலைமுறையினருக்கு மனத்தில் மகிழ்ச்சியுடன் தூங்கும் உழவனின் வாழ்க்கையை எடுத்துரைப்பதன் வாயிலாக எளிமையான வாழ்க்கையின் அவசியத்தை உணர்த்துகிறார்.

"முற்றிவிட்ட நெற்கதிர்கள் நன்றி யோடு

முத்தமிடத் தாய்முகமாம் நிலத்தில் சாயும்

நெற்றி வேர்வை சிந்தியவன் சிரித்துக் கொள்வான்,

நெய்தவனைக் காணுதற்கா நாணம் என்பான்,

கற்றதில்லை பள்ளியிலே உன்னைச் செய்ய,

கற்றவரும் நோக்குகிறார் எந்தன் கையை,

வெற்றி எல்லாம் எனக்கென்னும் உழவன் வீட்டில்

வெறுந்தரையில் தூங்குவதே 'அழகாம்' என்றீர்"

என்ற வரிகளில் சிறந்த சொற்களைத் தேர்ந்தெடுத்து உழவரின் மேன்மைக்கு அணி சேர்த்திருப்பது பாத்தென்றலின் சொல்லாட்சிக்குக் கட்டியம் சேர்க்கிறது (Murugadasan, 1990).

## அணிநயம்

கவிதைக்கு அழகு சேர்ப்பது அணியாகும். அணி என்றால் அணிகலம், அலங்காரம், அழகு, கூட்டம், ஒழுங்கு என்று பொருள்படும் (Pachaibalan, 2013). அணிகளுக்கெல்லாம் தாயணியாகத் திகழ்வது 'உவமையணியே ஆகும்'. ஒரு பொருளை அதேபோன்ற தன்மையுடைய இன்னொரு பொருளோடு ஒப்பிட்டு கூறுவது அல்லது செயலோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமையணியாகும். அழகோவியத்தில் உவமையணியையும் அதனடிப்படையில் பிறந்த தற்குறிப்பேற்றம், உருவகம், உயர்வு நவிற்சியணி போன்ற அணிகளையும் கையாண்டுக் காவியத்திற்கு அணிசேர்துள்ளார் பாத்தென்றல். வேலன் வெண்ணிலவை ஒரு பூங்காவில் எதிர்பாராத விதமாகச் சந்திக்கிறான். பார்த்த முதல் பார்வையிலேயே அவள் மீது காதல் கொள்கிறான். இதனை ஆசிரியர் கூறுமிடத்தில்,

“துள்ளி வரும் பருவ எழில் பாதைகாட்டத்

தோகைமயில் வெண்ணிலவு ஆடிக் கொண்டு

கிள்ளி வைத்த பிறைநிலவு வெற்றியாகக்

கிளை இருக்கும் மாங்கனியே கன்னமாக”

என்னும் அடிகளில் வெண்ணிலவின் நெற்றியைப் பிறை நிலவுடன் ஒப்பிட்டு உவமைப்படுத்தியுள்ளார் (Murugadasan, 1990). மேலும் பெண்ணழகு வருணனையைக் 'கேசாதி பாதம்' முறையில் வருணித்திருப்பது அவரது வருணனைத் திறனையே வருணிக்கின்றது. காதல் என்பது அன்று முதல் இன்று வரை பெரும்பாலான கவிஞர்களின் பாடுபொருளாக இருந்து வருவதனை நாம் இலக்கியங்களில் காணலாம். காதலானது தாய் வழி உறவின் வழியாகவோ அல்லது தந்தை வழி உறவு அல்லது பழக்கத்தாலோ வருவதுதான். ஆனால் இவை எதுவுமின்றி அன்புடைய நெஞ்சங்கள் காதலில் சங்கமிப்பதனைக் குறுந்தொகை பாடல் அழகுற எடுத்தியம்பியிருப்பது இங்கு வேலனின் காதலுடன் ஒத்துப்போவதனைக் காணலாம்.

“யாயும் ஞாயும் யாராகியரோ

எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்

யானும் நீயும் எவ்வழி அறிதும்

செம் புலப் பெயல்நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே”

என முதற்பார்வையிலேயே முன்பின் அறிமுகம் இல்லாதவரிடம் உண்மைக்காதல் ஊற்றெடுப்பதனை இப்பாடல் வரிகளில் காணலாம் (Narayana Velupillai, 2000). இவ்வாறு 'நவில்தொறும் நூல் நயம் போலும்' என்னும் குறள் வரிகளுக்கு ஏற்பப் பாத்தென்றல் அவர்கள் இலக்கியச் சுவைத் ததும்ப இக்குறுங்காவியதத்தினைப் படைத்திருப்பது வாசகர்களுக்குத் தெவிட்டா இன்பத்தினை நல்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## முடிவுரை

அழகோவியம் என்ற இக்குறுங்காவியத்தில் சிங்கை மக்களின் வாழ்வியல் கூறுகள் அழகாகச் சித்திரம்போல் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. நாட்டின் வரலாற்றைக் கூறும் வரலாற்று பெட்டகமாகவும் மக்களுக்குச் சமுதாய விழுமியங்களை எடுத்துக் கூறியதோடு மட்டுமல்லாமல் ஒரு சிறந்த இலக்கியத்திற்கான இலக்கியச் சிறப்புகளை மிகுதியாகக் கொண்டு கற்போர் மனதில் என்றும் நீங்கா சித்திரமாக ஆழப் பதிந்துள்ளது என்பதனை நம்மால் உய்த்துணர்ந்து கொள்ள முடிகிறது. இவ்வாறு அழகோவியத்தில் குடும்பம் என்ற கோயிலுக்குச் சுடர் விளக்காகத் திகழ்வது குழந்தையே எனபதனை ஆசிரியர் இலக்கிய சுவையுடன் அழகோவியத்தை உயிரோவியமாக்கியிருக்கிறார்.

## References

Bharathidasan, (1950) Kudum vilaku, Bharathidasan Pathippagam, Chennai, India.

Ilampuranar, (2019) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Jeyabal, R., (2004) Agananooru, New Century Book House, Chennai, India.

Murugadasan, (1990) Azhakoviam, Tamiloli, Singapore.

Narayana Velupillai, (2000) Kurunthogai Thelivurai, Mulai Nilaiyam, Chennai, India.

Natarasan, T. S., (2008) Kavithaiyenum Mozhi, New Century Book House, Chennai, India.

Pachaibalan, N., (2013) Thervukalam, Sri Manju Pathippagam, Malaysia.

Swaminatha Iyer, U.Ve., (1971) Purananooru Moolam Uraiyum, U.V.SA., Library, Chennai, India.

Varatharasan, M. (2006) Ilakkiya Marabu, Paari niliyam, Chennai, India.

Vellaivaranan, (2013) Tholkappiyam Seyyulial, Madurai Kamarajar University, Madurai, India.

Venkatasamy Nattar, N, M., (2010) avvaiyarin Moodhurai, Manivaasagar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License